1974 மார்ச் 23]

* 586 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களில் பால சேவிகாக்கள், சாலை வேலை செய்யும் காங்கி ஆட்கள் ஆகியோரின் நியமனத்தை பஞ்சாயத்து யூனியன் உத்தியோக நியமனக் குழு மூலமாகச் செய்ய வேண்டுமென யூனியன்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனவா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : சில ஊராட்சி ஒன்றியங்களில் காங் கூலிகளைப் பொறுத்த மட்டில்—கார்ப்பரேஷன் மஸ்டர் ரோல் ஊழல் போல ஏற்படாதிருக்க, என்ன முறையில் அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போது அதுபற்றி பரிசீலிக்கப்பட்டு, அது சமூக நலத்துறை ஆணையரின்பேரில்—இனி மேல் ஊராட்சி ஒன்றிய நியமனக் குழு மூலம் செயல்படுவது நல்லது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. ப. முத்துசாமி : ஹைவேசில் வேலை செய்கிற தொழிலாளர் களுக்குக் கொடுக்கப்படுகிற கூலி, ஊராட்சிகளில் வேலை செய்கிற காங் கூலிகளுக்கும் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதற்கும் இதற்கும் ஒப்பிட முடியாது. ஊராட்சி ஒன்றியங்களில் ஒதுக்கப்படுகிற சாலைகளைப் போடவே பணமில்லாத நிலையில் இருக்கிறார்கள். இதையும் அதோடு இணைக்க சாத்தியம் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பெருவழித்துறையில் இருக்கிற என்ஜினியர்கள் மஸ்டர்ரோல் பராமரித்துக்கொண்டிருக்கிறார்கள். அதை யூனியன் என்ஜினியருக்குக் கொடுத்து மேற்பார்வை செய்ய வேண்டிய ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சாலைகளுக்கு பணம் ஒதுக்குகிற நேரத்தில் எத்தனை பேர்கள் வைத்துக்கொள்ளலாம் என்று வைத்திருக்கிறார்கள். அதைக்கூட இப்போது என்ன செய்ய லாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

[1974 மார்ச் 23

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, இந்தப் பரிந்துரையின் அடிப்படையிலே எதிர்காலத்திலே உத்தியோக நியமனக் குழுவிலே சட்டமன்ற உறுப்பினர்கூட இடம்பெறச் செய்வதற்கு உத்திரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படியொன்றும் இல்லை.

திரு. க. நாகராஜன் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியச் சாலைகளை பெருவழித் துறையிலே எடுத்துக்கொள்ளும்போது அங்கே வேலை செய்கிற காங் கூலிகளையும் எடுத்துக்கொள்ள அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : காங் கூலி பிரச்னையைப் பொறுத்தவரையில் ஒன்றியங்கள் சம்பந்தப்பட்டவரையில் அவ்வளவு சரியாக இல்லை. ஆகவே எப்படி அதைச் செய்யலாம் என்பதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. சீ. க. வடிவேலு : பாலசேவிகா என்ற அடிப்படையிலே அவர்களுக்கு குறைந்த சம்பளம்தான் ஒன்றியத்தின் மூலமாகக் கொடுக்கப்படுகிறது, அவர்களுக்கு ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதைப்போல் ஊதியம் வழங்க அரசு உத்திரவிடுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படியொன்றும் இல்லை.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற சாலைகளையெல்லாம் நிதிநிலைமைகள் அங்கே பற்றுக்குறையாக இருக்கின்ற காரணத்தினாலே பராமரிக்க

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்பது சாலையைப் பற்றிய கேள்வி, இது வேறு கேள்வி.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, பாலசேவிகாக்கள், முக்கிய சேவிகாக்கள், கிராம சேவிகாக்கள் என்ற பெயர்கள் நீண்டகாலமாகவே வடமொழிப் பெயர்களாகவே இருக்கின்றன. அதைத் தமிழ்ப் பெயர்களாக மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அங்கத்தினருடைய யோசனைப்பற்றி பரிசீலனை செய்கிறேன்.

1974 மார்ச் 23]

திரு. நா. வீராசாமி: இந்த சேவிகாக்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள்? என்ன வேலை செய்கிறார்கள் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: சேவிகா என்றாலே சேவை செய்வது என்பதுதான் பொருள் என்று நினைக்கிறேன். முக்கிய சேவிகாக்கள் முக்கியமாக எப்படி எப்படி செய்யவேண்டுமென்பதனைப்பற்றியெல்லாம் கவனிக்கிறார்கள். பால சேவிகாக்கள் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். முக்கிய சேவிகாக்கள் போன்றதல்ல சேவிகாக்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: ஊராட்சி ஒன்றிய உத்தியோக நியமனக் குழுவில் யார் யார் அங்கம் வகிக்கிறார்கள்? ஒரு அதிகாரியும், ஒரு சேர்மனும், மற்றவர்களும் இருக்கிறார்கள். வைஸ்-சேர்மன் சும்மா தானே இருக்கிறார், அவரையும் இந்தக் குழுவிலே சேர்த்துக்கொண்டு அவர்களுக்குப் பொறுப்புக்களைக் கொடுப்பதற்கு அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: உதவித் தலைவர் என்பவர் தலைவருக்குத் துணைபுரிவதற்காகத்தான் இருக்கிறார். தலைவர் இல்லாதபோது துணைத் தலைவர் உதவி செய்யக்கூடிய முறையிலே பணியாற்றலாம். சில உப-தலைவர்களைப் பொறுத்தவரையில் உபத்திரவம் தருகிற தலைவர்களாகவும் இருக்கிறார்கள். தலைவர்கள் இல்லாத நேரத்திலேதான் துணைத் தலைவர்கள் பணியாற்றலாமே தவிர வேறு இல்லை.

Resident Welfare Officers

* 587 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether it is a fact that Resident Welfare Officers have been posted at Slum Clearance Board tenements in Madras City: and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத் திட்டப் பகுதிகளில் புதுக்குடியிருப்பு நல் வாழ்வுப் பேரவையால், குடியிருப்பு நல் வாழ்வு அதிகாரிகள் 14 பேர் தற்போது நியமிக்கப்பட்டுள்ளனர். புதுக்குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவைக்கும், குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கும் அதிகாரபூர்வமான தொடர்பேதும் இல்லை.